**கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ளஅபிப்பிராயம்

கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுமற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்புா 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிறுவனத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ளஅபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்குஇணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது,நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி

இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின்நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின்உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின்செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவனத்தின்ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவனத்தின்அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவனத்தின்வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை “திட்டமிட்டு பேணுதல்” நிறுவகத்திற்கு அவசியமாக உள்ளது.

#### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுக்கான தொடர்புடன் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியம இலக்கம் 09 இன் (35) இன் பிரிவின் பிரகாரம் முதல் வந்து முதல் செல்லும் முறை (FIFO) அல்லது நிறையிடப்பட்ட சராசரி முறை (WAC) என்ற இரண்டு முறையில் ஒரு முறையை தெரிவு செய்து பொருள் இருப்பின் கிரயம் மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்காமல் சராசரி கிரய முறையை பயன்படுத்தி நிறுவனத்தினால் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொருளிருப்பு ரூபா 28,685,144 தொகையில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | காணப்படுகின்ற கணனி முறைமையில் சராசரி கிரயத்தின் பிரகாரம் இருப்பின் மீள்கணிப்பீட்டை செய்வதற்கு தேவையான வசதிகள் காணப்படாமையினால் சராசரி முறை இருப்பு மீள்கணிப்பீட்டிற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது. இந்த வசதிகள் உள்ள புதிய கணனி முறைமை தற்போது தாபிக்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டு முதல் சராசரி முறையில் இருப்பு மீள்கணிப்பீடு மேற்கொள்ளப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் பொருள் இருப்பின் கிரயம் கணிப்பிடப்படல் வேண்டும். |
| (ஆ) | நியம இலக்கம் 03 இன் பிரகாரம் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் சரியாக இனங்கண்டு கணக்கீட்டு மதிப்பீடுகளில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் | முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டு எனினும் தற்போது பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் இந்த | சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலத்தை சரியாக இனங்கண்டு நிதிக்கூற்றக்களில் உள்ளடக்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை எடுக்காமையால் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டு தற்போது பயன்படுத்தப்படுகின்ற கிரயம் ரூபா 878,546,346 ஆன நிலையான சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் மீள்மதிப்பீட்டிற்காக காணப்படுகின்ற பிரயோக ரீதியிலான வசதியீனங்களின் (தொழில்நுட்ப நிபுணர்களின் சேவை) அடிப்படையிலும், நாட்டில் காணப்பட்ட சிக்கலான நிலைமையும் இதனை மேற்கொள்வதற்கு வசதியீனமாக இருந்தது. எனினும் அதற்காக அனுபவ சேவை பங்களிப்பாளர்களின் சேவையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| (இ) | நியம இலக்கம் 02 இல் குறிப்பிடப்பட்ட நியதிகளுக்கு இணங்காத வகையில் முன்னைய ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டு மீளாய்வாண்டின் போது சொத்துக் கணக்குகளுக்கிடையே மாற்றப்பட்டிருந்த இரசாயனகூட உபகரணங்களின் பெறுமதியானரூபா 225,234,416 தொகை மீளாய்வாண்டின் காசு ஈடுபடுத்தலாக காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிந்தது. | இந்த பெறுமதி முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள நடைமுறை வேலையின் மூலம் கழித்து சீராக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய கொடுக்கல் வாங்கல் மாத்திரம் ஈடுபடுத்தி காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட இனங்காணப்படாத நேர் வங்கி செலவு வைத்தல் ரூபா 12,897,354 தொகை மீளாய்வாண்டின் போதும் நிறுவனத்தினால் கண்டறிவதற்கு நடவடிக்கை | இந்த நிலைமையை மாற்றியமைத்து உரிய நேர் வங்கியிடல்களை இனங்காண்பதற்கும் மற்றும் கணக்கீடு செய்வதற்கும் தேவையான சிலநடவடிக்கைகள் 2021 இன்இறுதி அரைப்பகுதி முதல் Smart Online Payment Gate Way System(WEB PAY, SMART | இனங்காணப்படாத நேர் வங்கி செலவு வைத்தல்களை உரிய பிரகாரம் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்காமல் செலுத்த வேண்டிய செலவினமாக நடைமுறைப் பொறுப்பின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | PAY, LANKA QR , Internet payment gateway and APP Biller)செயற்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. மேலும் உரிய பட்டியல் இலக்கம் இன்றி எமது கணக்கில் பணம் சேகரிப்பதற்கு அவகாசம் அளிக்காதிருப்பதற்கு வங்கிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ரூபா 12,897,354 பெறுமதி 2022 மே மாதம் வரையில் ரூபா 5,270,109.39 வரை குறைக்கப்பட்டுள்ளது. மிகுதி நேர் வங்கியிடல்களை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் கடன்பட்டோர் மீதி ரூபா 11,124,306 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் (கணக்குக் குறிப்பு 18A) கடன்பட்டோர் மீதி ரூபா 15,718,055 ஆக காண்பிக்கப்பட்டமையால் கடன்பட்டோர் காலப்பகுப்பாய்விற்கும், நிதிக்கூற்றுக்களில் கடன்பட்டோர் மீதிக்கும் இடையே ரூபா 4,593,749 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. எனினும் அந்த வேறுபாடுகள் தொடர்பாக பரீட்சித்து நிதிக்கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த வேறுபாட்டை சரிசெய்வதற்கு கணனி மென்பொருள் கம்பனிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது உரிய சரிசெய்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வின் மீதி மற்றும் கடன்பட்டோர் மீதி ஒரே பெறுமதியாக இருக்கும் வரையில் உரிய மீதிகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிறுவனத்திலிருந்து சேவையொன்றை வழங்குவதற்காக வாடிக்கையாளர்களினால் இணையவழி முறைமையில் வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட பணம் வங்கியில் வைப்புச் செய்யப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது மற்றும் அந்த வைப்புக்களுக்குரிய வைப்பு பற்றுச்சீட்டுக்களின் மூலப் பிரதிகள் நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கின்ற சந்தர்ப்பத்தின் போதும் ஒரே கொடுக்கல் வாங்கல் தொடர்பாக இரு தடவை பேரேட்டில் பதியப்பட்டமையின் காரணமாக கடன்பட்டோர் மீதி ரூபா 7,602,974 இனால் குறைத்தும் காசு மீதி அந்தப் பெறுமதியால் அதிகரித்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அப்பெறுமதியை ஓய்வுபெறச் செய்யாத வைப்பாக வங்கி இணக்கக்கூற்றில் உள்ளடக்கி வங்கி கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது. | எவ்வாறாயினும் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் காணப்பட்ட COVID - 19 தொற்றுநோய் நிலைமைக்கிடையே அதிகமான தரப்பினர் இணையவழி முறைமையில் பணத்தை வைப்புச் செய்தல் மற்றும் உரிய சேவைகள் ஊழியர் தரப்பினர் வீட்டிலிருந்து செயற்பட்டமையின் மூலம் தேவையான தொடர்பாடல் நடவடிக்கைகளை உரிய பிரகாரம் மேற்கொள்வதில் காணப்பட்ட நடைமுறை ரீதியான வசதியீனத்தின் காரணமாகும்.இந்த நிலைமை தற்போது உரிய பிரகாரம் சீராக்கப்பட்டுள்ளது. | கடன்பட்டோரி லிருந்து இணையவழி முறைமையில் பணத்தை பெற்றுக் கொள்ளுதல், இரு தடவை கணிப்பீடு செய்யப்படாத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் வங்கி இணக்கக் கூற்று உரிய பிரகாரம் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதி வரையில் 03 வருடங்கள் முதல் 16 வருடங்கள் வரையான காலவீச்சிலிருந்து செலுத்த வேண்டிய மீதியாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற கூட்டுமொத்தமான ரூபா | Bank Rejection, Maintenance Expenditure (coir project) Re-Bankingஇற்காக உரிய மீதி உறுதிப்படுத்தல் 10 வருடங்களை விட பழையதாக இருந்ததுடன் இந்த மீதிகளை உறுதிப்படுத்திக் | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற மீதிகளை உறுதிப்படுத்தும் நிறுவனத்திற்கு உரித்தான வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 8,039,067 ஆன 08 மீதிகளுக்காக மீதிகளை உறுதிப்படுத்துவதற்குரிய தகவல்கள் / ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையினால் இந்த பொறுப்புக்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | கொள்வதற்குரிய விபரங்களை வழங்குதல் வசதியீனமாக இருந்தது. Refund Customer over payment, 2015 VAT over payment இந்த மீதி VAT வரி சதவீதம் மாற்றமடைகின்ற சந்தர்ப்பங்களின் போது செலுத்தப்பட்ட வரித் தொகையாக இருந்ததுடன் அவ்வாறு செலுத்தப்பட்ட சகல பெறுமதிகளுக்குமுரிய நுகர்வோர்களின் கோரிக்கையின் அடிப்படையில் மீண்டும் செலுத்துவதற்காக இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. DMS30 Resigned/ Present Employee பெறுமதி DMS30 சுற்றறிக்கையின் பிரகாரம் முன்னாள் இருந்த உத்தியோகத்தர்களின் தரங்கள் மாற்றமடைந்ததன் அடிப்படையில் செலுத்துவதற்கு ஏற்பட்ட நிலுவைப் பணம் செலுத்துவதற்கு ஏற்பட்ட ஒதுக்கீடாகும். | |
| (உ) | 2019 ஆகஸ்ட் மாதத்தின் போது யுனிடோ மானியம் (UNIDO Grant) ஊடாக நிறுவனத்தின் பொதியிடல் பொருட்கள் ஆய்வுகூடம் (Packing Material Lab) இற்கு கிடைக்கப்பெற்ற 19 ஆய்வுகூட உபகரணங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களிலும், நிலையான சொத்து பதிவேடுகளிலும் உள்ளடக்கப்படாது இருந்ததுடன் அந்த | பொதியிடல் பொருட்கள் (Packaging Laboratory) இரசாயன ஆய்வுகூடங்களுக்கு UNIDO Grantமானியமாக 19 உபகரணங்கள் 2019 ஆம் ஆண்டின் போது கிடைத்திருந்ததுடன் அந்த உபகரணங்களின் பெற்றோலிய ஆய்வுகூடத்தில் அதுவரையில் தற்காலிகமாக களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. மேலும் பொதியிடல் ஆய்வுகூட நிர்மாணம் 2019 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் இதுவரையிலும் அது பூர்த்தி செய்யப்படாதிருந்தது. அதன் | நிறுவனத்திற்கு கிடைக்கின்ற நிலையான சொத்துக்கள் உரிய பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேட்டிலும்,நிதிக்கூற்றுக்களிலும் உள்ளடக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| உபகரணங்களின் பெறுமானத்தேய்வு செயற்பாடுகளிலிருந்தும் புறக்கணிக்கப்பட்டிருந்தது. உயர்ந்த பெறுமதியுடைய இந்த உபகரணங்களின் பெறுமதியை உறுதிப்படுத்துவதற்காக தேவையான தகவல்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | பிரகாரம் உரிய உபகரணங்கள் Commissioning 2019 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட போதிலும் அந்த உபகரணங்கள் பொதியிடல் இரசாயன கூடங்கள் தாபிக்கப்பட்ட 2021 ஆம் ஆண்டின் இறுதி அரைப் பகுதியில் (Renovation 2021 ஆம் ஆண்டிலேயே) பூர்த்தியடைந்திருந்தது. அதன் பிரகாரம் இரசாயன ஆய்வுகூடம் மற்றும் அதில் உள்ள சொத்துக்களின் பயன்பாடு 2022 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்பட்டிருந்தது. சொத்துக்கள் அமைந்துள்ள இடங்கள் மற்றும் சொத்துக்கள் உரிய பிரகாரம் நிலையங்களில் வைத்தல் 2021 இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்படாதிருந்தமையால் இந்த மானியத்திலிருந்து நிலையான சொத்துப் பதிவேட்டில் 2022 ஆம் ஆண்டின் போது உள்ளடக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வு சொத்துக்கள் கிடைத்த திகதி முதல் 2021 ஆம் ஆண்டு வரை உரிய சீராக்கங்கள் திரண்ட நிதியம் ஊடாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. | |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| பெற வேண்டிய மீதிகள் காணப்பட்ட 01 வருடம் முதல் 07 | விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப இராஜாங்க | பெறவேண்டிய பணத்தை பெற்றுக் |

வருடங்களுக்கு இடையிலான காலம் பழைய கூட்டுமொத்தமான ரூபா 14,535,683 ஆன நானாவித கடன்பட்டோர் மீதிகளை மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் வெளிநாட்டு புலமைப்பரிசில் உடன்படிக்கைகளை மீறிய 21 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 17,044,754 ஆன பணம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

அமைச்சு வாடகை அடிப்படையில் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தில் இருந்த காலத்திற்குரிய பெற வேண்டிய வாடகையாக இருந்ததுடன் இதனை வழங்குமாறு பல தடவைகள் எழுத்து மூலம் கோரிக்கை விடப்பட்டிருந்தது. முகாமைத்துவ தகவல் முறைமை, இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம், ஒட்சிசன் ஹவுஸ், WHT Tax, VAT WHT என்ற விடயங்கள் 10 வருடங்களுக்கு முன்னிருந்து கொண்டு வருகின்ற மீதியாக இருந்ததுடன் இந்த மீதியை அறவிடுதல் நிச்சயமற்றதாக இருந்தது. மீள செலுத்த வேண்டிய விமான பயண சீட்டுக்களுக்காக பணம் செலுத்துமாறும் பணம் செலுத்துவதில்லையாயின் சட்டரீதியான நடவடிக்கைகளுக்காக அனுப்பப்படுவதாக உரிய தரப்பினருக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அறவிட வேண்டிய ரூபா 17,044,754 மொத்த தொகையில் ரூபா 4,020,392 தொகை 17 உத்தியோகத்தர்களுடன் தொடர்புடையதாக இருந்ததுடன் உடன்படிக்கையை மீறிய உத்தியோகத்தர்களுக்குரிய பணத்தை அறவிடுவதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் உத்தியோகத்தர்கள் நாட்டிற்கு வெளியே சென்றிருந்தமையால் அந்த நடவடிக்கைகள் தோல்வியடைந்திருந்தது. அவர்களின் அநேகமான பிணையாளர்களும் நாட்டிலிருந்து வெளியே சென்றிருந்ததுடன் சிலர் உயிருடன் இல்லை.

கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

உடன்படிக்கையை மீறிய உத்தியோகத்தர்களின் காலப்பகுப்பாய்வு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.
30 வருடங்களுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்கள் 04,
20 வருடங்களுக்கு மேற்பட்ட உத்தியொகத்தர்கள் 08,
10 வருடங்களுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்கள் 06,
ரூபா 12,541,165 பெறுமதி உடன்படிக்கை மீறிய உத்தியோகத்தர்கள் இருவருக்காக தேவையான நடவடிக்கைகள் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. அதில் ஒரு உத்தியோகத்தர் உடன்படிக்கையின் பிரகாரம் இந்த பண்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்.

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனசாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் 507(2) ஆம் பிரிவு | திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சகல நிலையான சொத்து விடயங்களும் இருப்பை சரி பிழை பார்த்து அவற்றின் நிலைமை குறிப்பிடப்படல் வேண்டும். இந்த சொத்துக்கள் தொடர்பான கூற்று தயாரித்து வருடாந்த கணக்குகளுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதும் நிறுவனத்தினால் 2021 ஆம் ஆண்டிற்காக பொருள் மெய்மையாய்வு கணக்காய்வுத் திகதியான 2022 ஆகஸ்ட் 26 ஆந் திகதி | 2021.12.31 இல் உள்ளவாறு உரிய நிலையான சொத்துக்கள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் COVID - 19 (கொரோனா) தொற்றுநோயினால் நிறுவனத்தில் உரிய முறையில் அமுல்படுத்துவதற்கு முடியாமையின் காரணமாகவும், அண்மையில் முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டிருந்த எரிபொருள் நெருக்கடி மற்றும் நாட்டில் காணப்பட்ட நிலைமையின் | பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் குறித்துரைத்த தின காலப்பகுதியில் மேற்கொண்டு உரிய அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | அடிப்படையில் 05 தினங்களும் கடமை நடவடிக்கைகளை செய்ய முடியாதிருந்தமையால் அந்த நிலையான சொத்துக்களை மெய்மையாய்வு செய்யும் நடவடிக்கைகள் குறித்த காலத்தில் நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. அந்த செயற்பாடுகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அதனை கூடிய விரைவில் (2022 செப்தெம்பர் மாதத்தில்) பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவு மற்றும் பொது 267 படிவம் | நிறுவனத்திற்குச் சொந்தமான வாகனங்களில் எரிகின்ற எரிபொருள் அளவு தொடர்பாக ஒவ்வொரு எரிபொருள் பரிசோதனையும் 12 மாத கால எல்லையின் பின்னர் அல்லது 25,000 கிலோமீற்றர் அளவு ஓடியதன் பின்னர் அல்லது என்ஜினுடன் தொடர்பான பிரதான பழுதுபார்த்தல்களின் பின்னர் அல்லது ஏதேனுமொரு காரணத்திற்கு இடையில் முதலாவது நிகழ்கின்ற சந்தர்ப்பத்தின் பின்னர் மீண்டும் எரிபொருள் பரிசோதனையொன்று மேற்கொண்டு அதன் பிரகாரம் ஓட்டக் குறிப்புக்களை பேணிச் செல்வதற்கு எரிபொருள் எரிவு தொடர்பாக சம்பவத் திரட்டு புத்தகத்தில் உரிய பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட திகதி, லீற்றர் ஒன்றிற்கு ஓடக்கூடிய தூர அளவு மற்றும் எரிபொருள் பரிசோதனை மேற்கொண்ட உத்தியோகத்தரின் கையொப்பம் போன்ற விபரங்கள் குறிப்பிடப்பட வேண்டியிருந்த போதும் | இதற்கு முன்னர் வாகன எரிபொருள் பரிசோதனை உள்ளகக் கணக்காய்வு பிரிவின் மேற்பார்வையுடன் முறையாக மேற்கொள்ளப்பட்டதுடன் காணப்பட்ட நடைமுறை ரீதியான (தற்போது பயன்பாட்டில் காணப்படுகின்ற வாகனங்களில் அனேகமானவை 10 வருடங்களும், 15 வருடங்களும் அளவான பழைய வாகனங்கள் ஆனமையால்) மற்றும் காலரீதியான பிரச்சினைகள் (கொரோனா தொற்றுநோய் மற்றும் நாட்டில் காணப்படுகின்ற எரிபொருள் பற்றாக்குறை) இதனிடையே இந்த நடவடிக்கைகள் முடங்கியிருந்ததுடன் தற்போது காணப்படுகின்ற நிலைமையை கவனத்தில் கொண்டு விரைவாக அந்த நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதற்கு | வாகனங்களின் எரிபொருள் பரிசோதனையை உரிய பிரகாரம் மேற்கொண்டு சம்பவத் திரட்டு புத்தகங்களில் தேவையான தகவல்களை பதிவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 22 சம்பவத் திரட்டு புத்தகங்களுக்கிடையே எந்தவொரு புத்தகத்திலும் எரிபொருள் பரிசோதனை மேற்கொண்டமைக்குரிய குறிப்புக்கள் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | நடவடிக்கை எடுக்கப்படும். | |

**1.8 நிதி முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| பெறுமதி ரூபா 2,448,085 ஆன 04 வங்கிக் கணக்குகள் செயலிழந்த வங்கி கணக்காக 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் பேணிச் செல்லப்பட்டிருந்த போதிலும் அந்த பணத்தை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இலக்கம் 000-2876-229 என்ற கணக்கு தும்பு சார்ந்த செயற்திட்டமானcoir செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்பட்டதுடன் இலக்கம் 000-9283-122 கணக்கு மற்றும் 000-8174-439 கணக்கு EEPEX செயற்திட்டத்தின் கணக்காக இருந்ததுடன் இது 2022 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்பட்ட GIZ செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்படுகின்றது. இலக்கம் 76175979 இது GIZ உடன் நடைபெற்ற செயற்திட்டத்திற்குரிய வங்கி கணக்காக இருந்ததுடன் 2022 ஆம் ஆண்டு முதல் GIZ உடன் புதிய செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இதற்காக இந்த கணக்கு உதவியாக இருந்தது. | செயலிழந்த வங்கிக் கணக்குகள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 47,679,836 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 11,065,299 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 58,745,135 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த நிதிவிளைவுகளின் அதிகரிப்பிற்கு மீண்டெழும் மானியம் ரூபா 9,467,000 இனாலும், வருமானம் ரூபா 61,573,883 இனாலும் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) அபிவிருத்தியடைந்த நாடுகளில் உயர் மருந்து ஆய்வு கூடங்களுக்கு ஈடாக வசதிகளுடன் கூடிய ஜீஎல்பி (GLP) தரத்தை கொண்ட நவீன மருந்து ஆய்வுகூடமொன்று திறைசேரி நிதியேற்பாடுகளில் ரூபா 99,423,972 செலவில் நிறுவனத்தில் 2019 ஆம் ஆண்டு முதல் பேணிச் செல்லப்பட்டிருந்த போதிலும் நாட்டில் உள்ள வைத்தியசாலை முறைமைகளை உள்ளடக்கிய சகல மேற்கத்தய மருந்து வழங்கல்கள் மற்றும் பகிர்ந்தளித்தலின் போது தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையின் மூலம் மேற்கூறப்பட்ட ஆய்வுகூடத்தில் விரிவான சேவையினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் ஆய்வுகூடம் தாபிக்கப்பட்டதன் பிரதான நோக்கமான இலங்கையில் மருந்து பிரிவில் அபிவிருத்திக்காக சுயாதீன தரத்தையுடைய மூன்றாம் தரப்பினர் ஆய்வுகூடமாக இந்த ஆய்வுகூடம் இதுவரை பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் எதிர்பார்க்கப்பட்ட பிரதான நோக்கங்களுக்கிடையே ஔடதங்களை பகுப்பாய்வு செய்வதற்காக உள்நாட்டு / சர்வதேச ரீதியில் ஏற்றுக் | மருந்து ஆய்வுகூடங்களில் உள்நாட்டில் உற்பத்தி செய்கின்ற கம்பனிகளினால் இறக்குமதி செய்யப்படுகின்ற மருந்து உற்பத்திகளை பரீட்சித்தல்களை முறைமைப்படுத்துவதற்காக அரசாங்கத்தின் வழிகாட்டல்கள் மற்றும் நிதி அனுசரணையின் அடிப்படையில் ஆய்வுகூடங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை ஆரம்ப பதிவு செய்தல் மற்றும் பின்னர் வருடாந்த பதிவிற்காக மருந்து உற்பத்திகளின் தரத்தன்மை தொடர்பாக மூன்றாம் தரப்பினரின் சுயாதீன பரிசோதனையை கட்டாயப்படுத்துவதற்காக சுகாதார அமைச்சு தேவையான கொள்கை ரீதியான மாற்றங்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்த்திருந்தது. சுகாதார அமைச்சின் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபைக்கு மருந்துகளை பரீட்சித்தல் தொடர்பாக ஒழுங்குபடுத்துதல் அதிகாரம் உள்ள அமைப்பாகும். மூன்றாம் தரப்பினரின் பரிசோதனை கட்டாயப்படுத்தப்படா மையால் மருந்து உற்பத்தியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் தமது உற்பத்திகளை பரீட்சிப்பதற்காக ITI இற்கு வருகை தரவில்லை. | தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை ஊடாக இந்த ஆய்வுகூடம் மூன்றாம் தரப்பினரின் ஆய்வுகூடமாக பயன்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருந்த துடன் ஆய்வுகூடம் தாபிக்கப்பட்டதன் பிரதான நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொள்ளப்பட்ட வெளிப்படையான நிலையமாக ஏற்படுத்துதல், துறைசார்ந்த மருந்துகளின் தேவையான சகல இரசாயன மற்றும் பௌதீக பகுப்பாய்வினை மேற்கொள்ளல், மருந்துகளின் தரத் தன்மை தொடர்பாக தேசிய பிரச்சினைகளை தீர்த்தல் மற்றும் மருந்துகளின் உள்நாட்டு ரீதியான பிரமாணங்கள் மற்றும் வழிகாட்டிகளை வலுப்படுத்துதலும் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | அதனால் உரிய ஒழுங்குபடுத்தல் அதிகார சபையினால் கட்டாய தேவையான அரசாங்கத்தின் மூன்றாம் தரப்பினரின் சுயாதீன பரிசோதனையை அமுல்படுத்துதல் தேவையாக இருந்தது. ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பில் மேற்கூறப்பட்ட மாற்றங்கள் அமுல்படுத்தப்படும் வரை கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு மருந்துகள் மற்றும் உராய்வு எண்ணைகளை பரீட்சித்தல் போன்ற இரண்டும் உள்ளபடியான பரிசோதனை தேவைகளை விட சிறிய அளவு மாத்திரம் பெறப்பட்டிருந்தது. | |
| (ஆ) | 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இலங்கையில் பொதுமக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு (PUCSL) நியமங்களுக்கு இணங்க மூன்றாந்தரப்பினர் கனிய எண்ணெய் உற்பத்தியில் பரிசோதனையை மேற்கொள்ளும் வகையிலான உபகரணங்களை கைப்பற்றிக் கொள்ளல் மற்றும் பொருத்துவதற்கு ரூபா 117.7 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட கனியஎண்ணெய் மற்றும் உராய்வு எண்ணெய் ஆய்வு கூடத்திற்காக பெற்றோலிய மாதிரிகளை பெற்றுக் கொள்ளும் முறைமையொன்று ஒழுங்கமைக்கப்படாமயால் ஆய்வுகூடம் தாபிக்கப்பட்டதன் ஆரம்ப நோக்கத்தை நிறைவேற்ற முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | எங்களின் இந்த ஆய்வுகூடத்திற்காகவும் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை (Regularity Authority) அதிகாரம் இல்லாதிருந்தமையால் சகல மாதிரிகளும் எமது ஆய்வுகூடத்திற்கு கிடைக்கப் பெறுவதில்லை. இந்த செயற்பாடுகளின் ஆரம்ப நோக்கத்தில் காணப்பட்டதுடன் அது தேசிய தேவையாக இருந்தமையால் அதற்காக வலுசக்தி அமைச்சு மற்றும் இலங்கை பொதுமக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுவின் பூரணமான அர்ப்பணிப்பின் அடிப்படையில் அமைச்சரவை தீர்மானத்தின் படி கூடிய விரைவில் செயற்பாட்டிற்கு கொண்டு வருவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | உரிய நிறுவனத்துடன் தொடர்புடைய கனிய ணெ்ணெய் பரிசோதனைகள் மேற்கொள்கின்ற ஆய்வுகூடமாக அமுல்படுத்து வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 3.2 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள், உபகரணங்கள் என்பன

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) Resistorஉபகரணத்தின் வெப்பநிலையை குறித்துரைத்த நியமத்தில் பேணிச் செல்வதற்காக பயன்படுத்தக்கூடிய UNIDO Grantஊடாக நிறுவனத்திற்கு கிடைக்கப் பெற்ற ரூபா 1,763,040 பெறுமதியுடைய Programmable Fluid Bathஉபகரணம் 2002 செப்தெம்பர் 04 ஆந் திகதி நிலையான சொத்து பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டு இலத்திரனியல் ஆராய்ச்சி கூடத்தில் காணப்பட்ட போதும் 2006 ஆம் ஆண்டிலிருந்து ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | பின்வரும் விடயங்களினால் இந்த சூடேற்றி (Programmable Fluid Bath) தற்போது பயன்படுத்தப்படுவதில்லை.<br><br>1. இந்த சூடேற்றி நவீன எதிர்ப்பு அளவுத் திட்டத்திற்காக அவசியமற்றதாகும்.<br><br>பழைய முறைமையின் பிரகாரம் மின்தடை முறைமைகளுக்கிடையே அதிக மின்னோட்டத்தை வழங்குவதன் மூலம் மின்தடை அளவீடு செய்யப்படுகின்றது. இந்த உயர் மின்னோட்டம் (>5A) எதிர்ப்பு வெப்பத்தை ஏற்படுத்துகின்றது. இதனால் எதிர்பார்த்த உணர்திறனால் அந்த எதிர்ப்பு மாற்றமடைய முடியும். எனவே அந்த வெப்பத்தை கட்டுப்படுத்துவதற்காக அந்த சூடேற்றியில் மூழ்கி விடுகின்றார்கள். சூடேற்றியின் உதவியுடன் ஒரு நிலையான வெப்பநிலையின் எதிர்ப்பு பேணிச் செல்லப்படுகின்றது. எனினும் தற்போது ஆய்வுகூடத்திற்குச் சொந்தமாகவுள்ள மிகவும் உணர்திறன் மிக்க 8.5 மல்ரிமீற்றர் அளவீட்டுடன் மிகச் மின்னோட்டத்துடன் | சொத்துக்களிலிருந்து ஆகக்கூடிய பயன்பாட்டை பெறக்கூடிய வகையில் அதனை பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

(<100Ma) மிகவும் துல்லியமாக பேண முடியுமாகவுள்ளது. எனவே இந்த சூடேற்றியமை பயன்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

2. இதனை அமுல்படுத்துவதற்காக அதிக மின்வலு தேவையாக இருந்தமையால் அதிக கிரயமொன்றை செலவிட வேண்டியிருந்தது.

பழைய முறைமையின் பிரகாரம் எதிர்ப்பு அளவுத் திட்ட திருத்தத்திற்கு அதிக மின்னோட்டம் (>5A) தேவைப்படுகின்றது. அது மட்டுமன்றி 20 லீற்றர் அளவான எண்ணெய் உள்ள சூடேற்றியின் வெப்ப நிலையை பராமரிக்க அதிக மின்வலு செலவாகின்றது. அதனால் கிரயம் அதிகரிக்கின்றது.

இதனால் இது பயன்படுத்தப்படுவதில்லை எனினும் வாடிக்கையாளர்களின் (Customers/ Clients) எதிர்காலத்தில் பரிசோதனை நடவடிக்கைகளுக்காக இதனை பயன்படுத்த முடியுமாக உள்ளது.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் டொறிங்டன் சூழலில் அமைந்துள்ள பிரதான கட்டிடத்தில் 3,627 சதுர.அடி அளவு,அலுவலகம் மற்றும் 57 ஆய்வுகூட | பிரதான கட்டிடத்தின் முதலாவது மாடியின் அறை இலக்கம் 1231 NVQ பாடநெறியை பின்பற்றுகின்ற மாணவர்களுக்காக ஆய்வுகூடமொன்றை | அலுவலக இடவசதிகளின் அளவு மற்றும் உபகரணங்கள் என்பவற்றை ஆக்கபூர்வமானதாக |

| | | |
|---|---|---|
| தளபாட உபகரணங்கள் அளவில் 2017 ஆம் ஆண்டு முதல் விளைவற்றுக் காணப்பட்டது. | தாபிப்பதற்கு 2021 ஆம் ஆண்டின் போது முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தைப் பெற்று பாடநெறியொன்று நடாத்திச் செல்லப்பட்டிருந்ததுடன் அதற்காக தேவையான உபகரணங்களும் இதில் சேகரிக்கப்பட்டு தற்போது காணப்படுகின்ற சகல ஆய்வுகூடங்களும் தளபாட உபகரணங்களுடன் பாடநெறிகளின் தேவைப்பாட்டின் பிரகாரம் அவை பரிசீலனை செய்யப்படுகின்றது.<br><br>**பிரதான கட்டிடத்தின் முதலாவது மாடியின் அறை இலக்கம் 1238 மற்றும் தரைமாடியின் அறை இலக்கம் 1123**<br><br>புதிய Science & Technology (S&T) வியாபார நிலையம் (Business Centre) இற்காக பிரதான கட்டிடத்தின் தரைமாடி மற்றும் முதலாவது மாடியின் சில அறைகள் (1238 மற்றும் 1123) உள்ளடங்கலாக) ஒதுக்கப்பட்டிருந்தது.<br><br>பிரதான கேட்போர் கூடம் மற்றும் தரைமாடியின் விருந்தினர்களை வரவேற்கும் பகுதியில் Lobby Area திருத்த நடவடிக்கைகளை பூர்த்தி செய்து அந்த வசதிகள் தற்போது S&T Business Centre இனால் பயன்படுத்தப்படுவதுடன் S&T வியாபார நிலையத்தின் பெயர்ப் பதாதை தற்போது தாபிக்கப்பட்டுள்ளது. தற்போது பயன்படுத்தப்படாதிருந்த | பயன்படுத்துதல் வேண்டும். |

போதும் பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிய சகல அலுவலக உபகரணங்களும் காணப்படுகின்றமையால் பொருளாதார வசதியீனத்தின் அடிப்படையில் எதிர்காலத்தில் பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. பிரதான கட்டிடத்தின் முதலாவது மாடியின் அறை இலக்கம் 1238 இல் காணப்படுகின்ற அலுவலக தளபாடங்கள் யாவும் Lab Benches ஆக இருந்ததுடன் அவற்றை இலகுவாக அகற்ற முடியாதிருந்தது. அதனால் தேவைக்கு ஏற்ப பயன்படுத்தப்படுகின்றது.

பிரதான கட்டிடத்தின் தரை மாடியின் அறை இலக்கம் 1123 இல் காணப்படுகின்ற அலுவலக தளபாடங்களுக்கிடையே காணப்படுகின்ற அனேகமான விஞ்ஞான தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைச்சிற்குரிய முன்னாள் இராஜாங்க அமைச்சரின் பதவியணியினரால் பயன்படுத்தப்பட்டதாக இருந்ததுடன் நிறுவனத்திற்குரிய சொத்துக்கள் அல்ல. எனினும் ஏனைய உபகரணங்களுக்கிடையே உள்ள 06 Lab Benches இலகுவாக அகற்ற முடியாதிருந்தது. பயன்படுத்தக்கூடிய நிலையில் உள்ள தற்போது பயன்படுத்தப்படாத தலைவரின் அலுவலகத்தில் 02 கதிரைகள் புதிய வியாபார நிலையத்தின் பயன்பாட்டிற்காக உபயோகிக்கப்படுகின்றது.